OS No.38/2017 நாள்: 26.06.2019

<u>வ.சா.1 ___ சிதம்பரம் ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

நான் என்ன பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் காவேரிப்பட்டிணம் உயர் நிலைப்பள்ளியில் அலுவலக உதவியாளராக இருந்து ஓய்வு பெற்றேன். எனக்கு பாண்டு எது, கிரயப்பத்திரம் எது, கிரய ஒப்பந்த பத்திரம் எது, காசோலை எது என்று வித்தியாசங்கள் தெரியும் என்றால் சரிதான். நான் முதலாம் பரிகாரம் ஆக கோரியுள்ளதற்கு ஒப்பந்தம் ஏதாவது இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் என் தாயார் எனக்கு தானசெட்டில்மெண்ட் செய்த சொத்தாகும். அந்த சொத்தைதான் பிரதிவாதிக்கு கிரயம் செய்துக்கொடுத்தேன் என்றால் நான் கிரயம் செய்யவில்லை ஆதாரமாகத்தான் போட்டுக்கொடுத்தேன். எனது தரப்பில் 20.02.2012ம் தேதியில் நான் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கிரயப்பத்திரத்தைதான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அது தான் வா.சா.ஆ.11 என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் தலைப்பில் கிரயப்பத்திரம் ரூ.30,000/- என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரயப்பத்திரத்தில் பிரதிவாதியான பொற்செல்விக்கு நான் எழுதிக்கொடுத்த புஞ்சை நில சுத்த கிரயப்பத்திரம் என்று காணப்படுகிறது என்றால் அதில் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதில் ரூ.30,000/-த்திற்கு சுத்த கிரயம் பேசி முழுதொகையும் நான் பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் நான் ஆதாரம் போட்ட பணத்திற்காகத்தான் அவ்வாறு எழுதிக்கொண்டேன். அதில் தற்காலிக சொத்து மதிப்பு ரூ.33,000ம் என்று போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பட்டுள்ளது. பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் மாமாவின் பேத்தி ஆக வேண்டும். பிரதிவாதியிடம் ஏற்கனவே உள்ள நிலமும்,நான் கிரயம் செய்ததாக சொல்லப்படும் இந்த 16

செண்ட் நிலமும் அருகருகே உள்ளன என்றால் ஒரு நிலம் தாண்டி உள்ளது. எனக்கு தானசெட்டில்மெண்ட் ஆக வந்த சொத்து எவ்வளவு என்றால் 16 செண்ட் தான். எனக்கு தானசெட்டில்மெண்ட் ஆக சுயமாக பாத்தியப்பட்ட சொத்தைதான் நான் கிரயப்பத்திரமாக எழுதிவைத்தேன் என்றால் ஆதாராமாகத்தான் கொடுத்தேன். நான்தான் கிரயம் செய்துக்கொடுக்க பேசி செண்ட் ரூ.22 ஆயிரம் என்று பேசி மொத்தம் ரூ.3,52,000/-த்திற்கு கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் இல்லை. நான் அனைத்து கிரய தொகையையும் நான் வாஙகிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ரூ.1 லட்சம் கடனாக பெற்றதாக கூறுவது பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரய ஆவணத்தில் உள்ள மொத்த சங்கதியையும் தெரியும் என்றால் சரியல்ல. நான் அதிலுள்ள வீடு, தென்னை மரங்கள் ஆகியவற்றை சேர்த்துதான் கிரயம் செய்துக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. அரசாங்க மதிப்பு ரூ.30,000- என்று போட்டிருந்தாலும் அதைவிட அதிகமான முத்திரைகட்டணம் செலுத்திதான் கிரயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. முத்திரை கட்டணதை பொறுத்து நான் எதுவும் கேள்வி கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு அந்த வீட்டை தவிர வேறு எந்த வீடும் இல்லை என்றால் சரிதான். நான் கிரயம் செய்த கொடுத்தபோதே குடியிருக்க வேறு விடு இல்லை என்றும் 3 மாதம் அதே வீட்டில் குடியிருக்க அவகாசம் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 3 மாதங்கள் கழித்து வீட்டை காலி செய்ய சொன்னபோதும், நான் சட்டவிரோதமாக குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மீதியிருக்கிற நிலத்தையும் தென்னை மரங்களையும், பிரதிவாதிததான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் கூட பொற்செல்வி என்றுதான் பிரதிவாதியின் பெயர் காணப்படுகிறது என்றால் ஆனால் செல்வி என்றுதான் கூப்பிடுவது. நான் அனுப்பிய சட்டஅறிவிப்பான

வா.சா.ஆ.13ல் பொற்செல்வி என்று குறிப்பிட்டுதான் அனுப்பியுள்ளேன் என்றால் நான் செல்வி என்றுதான் எழுதிக்கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 டைரி குறிப்பு செல்வி என்று எழுதி நானாக தயார் செய்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த டைரியை தயாரித்ததன்பேரில்தான் பிரதிவாதியின் பெயரை செல்வி (எ) பொற்செல்வி என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த டைரியில் 28.12.2011 என்ற தேதி எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. நான் மோசடியாக வா.சா.ஆ.9-ஐ தயார் செய்துக்கொண்டேன் என்றும் அதற்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அதில் பிரதிவாதி எந்த கையொப்பம் செய்யபவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களை பிரதிவாதிக்கு கிரயம் செய்வதற்கு முன்னிட்ட ஆவணங்கள் என்று சொன்னால் கிரயத்திற்கு பின்னிட்டும் நான்தான் வரியும் மின்கட்டணமும் செலுத்திவருகிறேன். பொய்யான தகவலின் அடிப்படையில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 நானாகவே தயார் செய்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்திற்கான முத்திரைத்தாளை நான்தான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்திற்கும் பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எப்போதும் எனக்கு மறுகிரயம் செய்துக்கொடுப்பதாக என்றுமே சொன்னதே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நம்பிக்கை இல்லை என்றால் அசல் கிரய ஆவணத்தை என்னையே வைத்துக்கொள்ள சொல்லி என்னிடம் கொடுத்தார். நான் பிரதிவாதி என்னிடம் அசல் பத்திரததை கொடுத்ததாக கூறுவது பொய்யான சங்கதி என்றும் நான்தான் பட்டா மாற்றம் செய்து தருவதாக கூறிஅசல்

ஆவணத்தையும் அதற்கான பணத்தையும் ஏமாற்றி பெற்றவந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் பட்டா பாண்ட் கொடுத்துவிடுவேன் என்ற எண்ணத்தில் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் நம்பிக்கையில்லை என்றால் அசல் பத்திரத்தை வைத்துக்கொள் என்றும் பணத்தை கொடுத்துவிட்டு மறுகிரயம் செய்துக்கொள்ளும்படி என்று என்னிடம் சொன்னார். பிரதிவாதி அவ்வாறு சொல்லவில்லை என்றும் நான்தான் ஏமாற்றி வாங்கிசென்று பத்திரததை திருப்பிக்கொடுக்காமால் இவ்வழக்கை தாக்கல் செய்வேண்டும் ன்ற எணத்தில் வைத்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது அந்த அசல் ஆவணத்தையும் பொய்யான டைரியையும் வைத்துக்கொண்ட பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த அறிவிப்பிற்கு பின்னிட்டு பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் இல்லை. நான் வீட்டை காலி செய்த தருவதாக ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. வீட்டை காலிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி முழு கிரய தொகையை கொடுத்து வழக்கு சொதிலுள்ள வீடு, நிலம் தென்னை மரங்கள் ஆகியவற்றை வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. தற்பொது அந்த நிலம் கூடுதல் மதிப்படைந்துள்ளது என்றால் சரிதான். அதை அபகரிக்க வேண்டி பொய்யாக வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏதோ ரூ. 1 லட்சம் கடன் பெற்றதாகவும் ரூ.3-வீதம் வட்டி செலுத்தியதாகவும் வழக்கிற்ககா பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எப்போது எனக்கு மறுகிரயம் செய்து கொடுப்பதாக கூறவில்லை என்றும் கற்பனையாக நானே கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு

செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்குமூலமோ, முகாந்திரமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.